# Morality Thoughts and Social Awareness in Vivekasinthamani

# விவேகசிந்தாமனியில் ஒழுக்கவியல் சிந்தனையும் சமூக விழிப்புணர்வும்

S. Saravanajothi Seetharaman[1]/ சீ. சரவணஜோதி □□□□□□□□□□□□

Assistant Professor, Department of Tamil,

Thiagarajar College, Madurai, India.

***Abstract…*** ***The Purpose of the study*:** Aim of the study is to study is to investigate the morality thoughts and social awareness stated in Vivekasinthamani**.** ***Methodology:*** This study based on qualitative method and the Descriptive approach has been used. ***Main Findings:*** The result of the research revealed the morality practices of Vivekasinthamani, written in the 16th century of Tamil literary history, are highlighted. There is a large number of literature on morality in the Tamil Society. There is separate category of Ethic literature in Tamil literary world. In this way, it's natural that Vivekasinthamani literature emerge in the Tamil traditional society. Therefore, the songs in Vivekasinthamani are structured both intellectually and morally for the daily life. Siirilakkiyam is the most common type of literature in Tamil literary world in 16th century. During this period, literatures such as Ula, Pillaitamil, Thoothu, and Parani were written Vivekasinthamani. The Tamil Society continue the Morality thoughts and social awareness in literature. Through the ages the goal of insisting moral thoughts is for the different kind of groups in the Tamil society. The morals that in the literature describes the backgrounds of social production. The benefit of this approach is that moral thinking, as articulated in the 16th century, is also used to legitimize the contemporary people's way of life. The researcher confirms this in this article on moral thinking and social awareness in Vivekasinthamani.

***Keywords…*** Vivekasinthamani, Morality thoughts, Ethic literature, Tamil society, Social production, Siirilakkiyam.

***ஆய்வுச்சாரம்…****இவ்வாய்வின் முதன்மை நோக்கம் விவேகசிந்தாமணியில் கூறப்பட்டுள்ள ஒழுக்கவியல் சிந்தனையும் சமூக விழிப்புணர்வும் குறித்து ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் விளக்கமுறை அணுகுமுறை கையளாப்பட்டுள்ளது. இவ்வாய்வில், தமிழ் இலக்கிய வரலாற்றின் 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட விவேகசிந்தாமனியில் கூறப்பட்ட ஒழுக்கவியல் நடைமுறைகள் எடுத்துறைக்கப்படுகின்றன. தமிழ்ச் சமூகத்தில் ஒழுக்க நெறிகள் குறித்து எழுதப்பட்ட இலக்கியங்கள் பெருமளவில் உள்ளன. குறிப்பாக தமிழ் இலக்கியத்தில் அற இலக்கியம் என்ற தனி வகைமை உள்ளன. இவ்வகையில் விவேகசிந்தாமணி என்ற இலக்கியம் தமிழ் சிந்தனை மரபில் தோன்றுவது இயல்பானதாகும். எனவே, விவேகசிந்தாமனியில் உள்ள பாடல்களும் அன்றாட வாழ்க்கைக்கு அறிவுரையாகவும் அறநெறியாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளன. 16ஆம் நூற்றாண்டில் பெருவழக்க இருந்தது சிற்றிலக்கிய வகைமையாகும். இக்கால கட்டத்தில் உலா, பிள்ளைத்தமிழ், தூது, பரணி, போன்ற நூல்கள் எழுதப்பட்டன. ஒழுக்கவியல் கூறுகள் காலத்தின் நீட்சியாக தமிழ்ச் சமூகத்தில் விரவிக்காணக் கிடைக்கின்றன. ஒழுக்கவியல் சிந்தனைகள் காலந்தோறும் தொடர்வதின் நோக்கம், மக்களின் சமூக ஒழுக்கம் குழு ஒழுக்கமாக ஒருங்கிணைக்கப்படுவதாகும். இலக்கியங்கள் எடுத்துரைக்கின்ற ஒழுக்க நெறிகள் சமூக உற்பத்தி முறையின் பின்புலங்களாகும். 16ஆம் நூற்றாண்டில்*

[1]The author is an Assistant Professor in Tamil, Thiagarajar College, Madurai, Tamilnadu, India.

*எடுத்துரைக்கப்பட்ட ஒழுக்கவியல் சிந்தனை சமகால மக்கள் வாழ்வியல் முறையை நெறிப்படுத்துவதற்குப் பயன்படுகின்றன என்பது இவ்வாய்வின் பயனாக அமைகிறது. இதனை, விவேகசிந்தாமணியில் ஒழுக்கவியல் சிந்தனையும் சமூக விழிப்புணர்வும் என்ற கட்டுரையின் மூலம் ஆய்வாளர் உறுதிசெய்கின்றார்.*

***கருச்சொற்கள்…*** *விவேகசிந்தாமணி, ஒழுக்கவியல் சிந்தனை, அற இலக்கியம், தமிழ்ச் சமூகம், சமூக உற்பத்தி, சிற்றிலக்கியம்.*

## *முன்னுரை*

தமிழ் இலக்கியங்களில் சிந்தாமணி என்ற பெயருடன் இரண்டு உள்ளன. சீவக சிந்தாமணி பெருங்காப்பியங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. விவேக சிந்தாமணி நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியம். ஆசிரியார் பெயர் தெரியாவில்லை. இந்நூல் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்த காலத்தில் பலராலும் மனனம் செய்யப்பட்டுள்ளன. இந்நூலின் பாடல்களை மனப்பாடமாகச் சொல்பவர்களைச் சமூகத்தில் மதித்துள்ளனர். தற்போது இந்நூல் வழக்கிழந்து போய்விட்டது. 135 பாடல்கள் மட்டுமே உள்ளன. அதிகம் விருத்த யாப்பையும் குறைவாக வெண்பாக்களும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் பயனில்லாதவையாக ஏழு கருத்துக்கள் கூறப்படுகின்றன. இந்த கருத்துக்கள் இன்றும் பரவலாக சமூகத்தில் பழமொழி போல் கையாளப்படுகின்றன.

"ஆபத்துக் (கு) உதாவாப் பிள்ளை,
அரும்ப சிக்குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழும் தானே"

கவிஞசர் சக்தி (2016) உரையாசிரியர், *விவேகசிந்தாமணி* பாடல் 1இல் கூறப்படுகின்ற கருத்துக்கள், "ஆபத்துக்கு உதவாத பிள்ளையும், கடும்பசியின் காலத்தில் பசியைப் போக்காத உனவும், தாகத்தைத் தீர்க்காத தண்ணீரும், குடும்ப வறுமையை அறியத பெண்களும், கோபத்தைக் கட்டுப்படுத்தாத அரசனும், ஆசிரியர் மொழியைக் கேட்காத மாணவனும், பாபத்தை தீராத தீர்த்தம் இவை ஏழும் உலகத்தில் பயனில்லதவையாகும்". உலக வாழ்க்கை பற்றி எளிமையான கருத்துக்ளை எடுத்துக்கூறுகின்றன. இது போல் அறுசீர் விருத்தத்தில் அறுபதிற்கும் மேற்பட்ட பாடல்கள் குடும்ப வாழ்க்கை, பரத்தையர் உறவு, என்ற கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றன. பெண்களை நம்புதல் கூடாது என்ற கருத்தினை முன்னிருத்தி பல்வேறு பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. எண்சீர் விருத்தத்தில் அமைந்த ஒரு பாடலில், "ஆல கால விடத்தை நம்பலாம், ஆற்று வெள்ளத்தையும் கடும் புயலையும் எதிர்கொள்ளலாம், மதங்கொண்ட யானையின் மீது ஏறலாம், வேங்கையையும் புலியையும் ஒடுக்கலாம், எமனின் தூதர்களை வரவேற்கலாம், கள்வர்களையும் கொலைத்தொழில் செய்பவர்களையும் நம்பி உடன் செல்லலாம், ஆனால் சேலை கட்டிய மாதரை நம்பினால் போகும் வழிதெரியாது தெருவில் தவிப்பார்கள்" (விவேகசிதாமணி, பாடல் -12), என்று கூறுகின்றது. இந்நூலில் பல பாடல்கள் பெண்கள்மீது உள்ள நம்பிக்கையைக் கேள்வி கேட்பதாக அமைந்துள்ளன.

இந்நூலில், சமூக வழக்கற்று ஒழுக்கவியல், விருந்தோம்பல், உறவுகளுக்கும் செல்வங்களுக்கும் உள்ள முன்னுரிமை, ஈகையும் ஈயேன் என்பதற்கான தருக்கம், வாழ்க்கையில் நிலைத்தன்மையும் சமூக அங்கிகாரமும், வாழ்க்கைக்குப் பயனற்றவை, துன்பத்தைப் போக்காதவை, மாதம் மும்மாரி குறித்த சமூக எள்ளல், சமூகத்தில் சொல்லக்கூடாதவை, யாத்திரை செல்லும் முறை, காதல் எடுத்துரைக்கும் முறை, ஒழுக்க விமர்சனத்தில்

பெண்கள் போன்ற கருத்துக்களின் அடிப்படையில், சமூக ஒழுக்கவியல் விழிப்புணர்வை சமகாலத்திற்கு எடுத்துரைக்கின்றன என்பதை இவ்வாய்வின் மூலம் எடுத்துரைக்கப்படுகிறது.

## *ஆய்வு முன்னோடிகள்*

தமிழ் இலக்கியங்களில் அறக்கோட்பாடு என்று பல்வேறு அறிஞர்களால் ஆராய்ந்து கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஒழுக்கக்கோட்பாடு என்பதை திருக்குறள் வைத்து மட்டும் பல்வேறு ஆய்வாளர்களால் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அற இலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒழுக்கவியல் மரபு விரிவாக எடுத்துரைக்கின்றன். ஆனால் 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட விவேகசிந்தாமணி ஒழுக்கவியல் சிந்தனை இதுவரை ஆராயப்படவில்லை. விவேகசிந்தாமணி நூலில் ஒழுக்கவியல் சிந்தனையும் சமூக விழுப்புணர்வும் என்ற பொருண்மை அடிப்படையில் மட்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

கே. கணேசராஜா (2018 ஜீன்), *கீழைத்தேயச் சிந்தனை மரபில் ஆசாரக்கோவை ஓர் ஒழுக்கவியல் நோக்கு* என்ற கட்டுரையில், “ஒழுக்க ரீதியான வாழ்க்கை அவசியம் என்பதை வலியுறுத்தும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் ஒழுக்கவியல் கருத்துக்கள் பெறுமதியானவைகளாகும். தனிமனிதன் முதல் சமூகம் வரை அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் அம்சங்கள் நடைமுறை ரீதியாக வலியுறுத்துவதாக அமைந்துள்ளது” என்று இவ்வாய்வு முன்வைக்கிறன்றன.

Saravanajothi, (2020), *Construction of Ethics in Cirupancamulam*, என்ற கட்டுரையில் சிறுபஞ்சமூலம் கட்டமைக்கின்ற ஒழுக்கவியல் சமூக வாழ்வியலின் நெறிமுறைகளைக் கட்டமைத்து நெறிப்படுத்துகின்றன என்பதாக ஆய்வு முடிவு அமையப்பெற்று உள்ளது.

Saravanajothi, (2020), *THE SOCIOPOLITICAL BACKGROUND OF MANIMEGALAI* என்ற கட்டுரை மணிமேகலை இலக்கியத்தில் அமைந்துள்ள அற கருத்துக்கள் சமயப் பின்புலங்களின் வழி மக்களின் ஒழுக்கவியல் கட்டமைக்கப்பட்டுள்ளன என்று ஆய்வு முடிபு அமையப்பெற்று உள்ளது.

சரவணஜோதி, **(2020),** *வருமுன்னர் காவாதான் வாழ்க்கை (திருவள்ளுவரின் ஒழுக்கவியல் விழிப்புணர்வு)* என்ற கட்டுரை திருவள்ளுவர் கூறும் ஒழுக்கவியல் கருத்துக்கள் மனிதவள மேம்பாட்டு நோக்கில் சமூக விழிப்புணர்வாக அமைந்துள்ளன என்பதை எடுத்துரைக்கின்றன.

மேற்கூறப்பட்ட ஆய்வு முன்னோடிகளின் கருத்துக்களில் ஒழுக்கம், சமூக கட்டமைப்புக்கு உறுதுணையாக அமைந்துள்ளன என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு விவேகசிந்தாமணியில் கூறப்பட்டுள்ள ஒழுக்கவியல் கூறுகள் சமகால வாழ்வியலுக்கு விழிப்புணவை ஏற்படுத்துகின்றன என்பதைக் கூறுவதாக அமையப்பெறுகின்றன.

## *சமூக வழக்காறும் வாழ்வியல் விழிப்புணர்வும்*

உலக வாழ்க்கையில் அடிப்படையான உறவுகளான குழந்தை, மனைவி குறித்து கூறும்போது, “பிள்ளை வளர்ந்து பெரியவனானவுடன் தன் தந்தை சொல் கேட்க மாட்டான், அதைப் போல் மனைவி வயதானவுடன் கனவன் சொல் கேட்க மாட்டாள்” (விவேகசிந்தாமணி, பாடல், 2) என்று சமூக மதிப்பீட்டை முன்வைக்கிறார். இக்கருத்தியில் தற்கால சூழலில் பொருந்திப்போவதை சமகால பத்தரிக்கைகள் எடுத்துரைக்கின்றன். ஆனால், கனவன், மனைவி குறித்துக்கூறும் கருத்தியல் மாந்தர்களின் வாழ்க்கைத் தன்மைக்கு ஏற்ப இவை மாறுபடலாம். இக்கருத்தியல் வேறு அற நூல்களில் குறிப்பிடப்படவில்லை.

மனிதர்களின் வாழ்க்கையில் நட்பு முக்கியமான கூறாகும். நட்பின் தன்மை குறித்து அற நூல்கள், திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை போன்ற நூல்கள் முழுவதும் விரிவாக கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. இக்கருத்தினை எடுத்துரைக்கும் விவேகசிந்தாமணி, “கெட்ட குணம் உடைய மந்திரிகளால் அரசனும் உலகமும் அழிந்துபோகும், பெற்றோர் சொற்புத்தி கேளாதவர்களால் தான் பிறந்த குலம் அழிந்துவிடும், தீயவர்கள் நற்சொல் கூறினாலும் அதை ஏற்க மாட்டார்கள், நன்மை செய்தாலும் அதற்கு பதில் தீமையே செய்வார்கள், இத்தகையா மனிதர்களோடு சேர்ந்தால் நம் குலப்பெருமையும் கெடும். இவர்களால் பெரும் கோபமும் ஏற்பட்டு நாமும் அழிந்துபோவோம்” (விவேகசிந்தாமணி, பாடல், 17) என்ற வாழ்வியல் நெறியினை எடுத்துரைக்கிறார்.

உலக வாழ்க்கையில் "பசித்தவனுக்கு உணவு கொடுக்காது உண்பவன் பாவியாவான், நல்ல நூலைப் படிக்காதவன் மூடனாவான், அளவாக பேசத்தெரியாதவன் தன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து தாழ்ந்து போவான், ஒரு வேலையும் செயாதவன் மூதேவியாவான், ஒன்றுக்கும் உதாவதாவன் சோம்பேரியாவன், பெரியோர் சொல் புத்தி கேளாது மரம் போல் இருப்பவன் உலத்தில் பேய்போல் அலைவான், எல்லாருடைய கருத்துக்கும் எற்ப பேசுகிறவன் ஏமாற்றுகிறவனாவான்" (விவேகசிந்தாமணி, பாடல், 20) என்ற வாழ்வியல் விழிப்புணர்வு கருத்துக்களைக் காணமுடிகிறன. சமூக வழக்காற்றுக் கருத்துக்களக் காண்பதன் மூலம், அப்படியே உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தம் இல்லை. இவற்றைப் பகுத்து ஆராய்கிறபோது சமூக உணர்வு இந்நூலசிரியரிடம் இருப்பதைக் காணமுடிகிறது. படைபாளரின் சமூக ஒழுக்கவியல் குறித்த மதிப்பீடு எந்தவிதச் சார்புத்தன்மையும் இல்லாதாகும். இக்கருத்தினை முன்வைக்கும் படைப்பாளி தம்கால அரசியல், சமயம் போன்ற பின்புலம் இல்லாது பதிவு செய்துள்ளார். எனவே இந்நூல் தனிமனித உணர்வுப்புலப்பாடாக அமைந்துள்ளது.

## *சமூகத்தில் ஈகை, ஈயேன் உருவான தருக்கம்*

சமுகத்தில் இருவகையான மனிதர்கள் வாழ்கின்றனர். தனக்கானத் தேவையைப் தாமே பூர்த்திசெய்து செல்வச் செழிப்புடன் வாழ்பவர்கள், மற்றொருசாரர் தன் தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளாமல் பிறரிடம் கையேந்தி வாழ்பவர்கள். இத்தகைய முரண்களுக்குக் காரணம் சிவனிடம் கேட்க வேண்டும் என்றும் இறைவழிபாட்டு தத்துவத்தை முன்வைக்கிறார். விவேகசிந்தாமணியில் சிவனின் புராணாத் தொன்மங்களை வைத்து வாழ்வியல் முரண்களை விளக்குகிறார். "சிவனின் ஒரு பாதியை திருமாலும் மறு பாதியை பார்வதியும் பெற்றுக்கொண்டார்கள். இதனால் முப்புரம் எரித்த சிவன் தன் உடலின் இருபாதியையும் இழந்தான். சிவனிடம் இருந்த பதுமநிதி, சங்கநிதி இரண்டும் கடலுக்குச் சென்றுவிட்டது. அவன் அணிந்திருந்த பிறை வானுக்குச் சென்றுவிட்டது. அவன் கழுத்தில் இருந்த பாம்பு பாதாளத்திற்குச் சென்றுவிட்டது. கேட்டதைக் கொடுக்கும் சிவனே, உன் கையில் கேட்டதைக் குடுக்கும் செல்வத்தையும் என் கையில் திருவோட்டையும் கொடுத்தான்" (*விவேகசிந்தாமணி*, பாடல், 131) என்று செல்வமும் வறுமையும் ஓர் இடத்தில் வருவதற்கான கரணத்தினை விவாதிக்கிறார். இத்தகு முரணுக்கு காரணம் கண்டறிவது நதிமூலம் ரிசிமூலம் காண்பது போல். எந்த காலத்திலும் இதற்கான விடையை காணமுடியாது. சமண இலக்கியங்கள் இத்தகுச் சூழலை விளக்கும் போது வினைக்கோட்பாடு என்ற கருத்தினை முன்வைக்கின்றன. புகழ்பட வாழ வேண்டுமானால் பிறர்க்கு பொருள் கொடுத்து வாழவேண்டும், அப்படி வாழ்ந்தால் மனித உயிர் நீடித்து வாழ்வதற்கு ஊதியமாக அமையும். இதனை,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள் 231)

என்ற வள்ளுவரின் புகழ் என்ற அதிகாரத்தின் மூலம் விளக்குகிறார்.

தமிழ்ச் சமூகத்தில் ஈகை பெறுமையாகவும் அடுத்தபிறவிக்கான நற்பண்புகளை தருவதாகவும் அற இலக்கியங்கள் கற்பிக்கின்றன. ஒன்றும் இல்லாதவர்க்கு பொருள் கொடுத்து உதவுவது ஈகை, மற்ற காரணங்களுக்காகப் பிறர்க்குப் பொருள் குடுத்து உதவுவது எதோ எதிர்பார்த்து செய்வதாகும் என்று வள்ளுவர்,

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள், 121)

இக்குறளின் வழி ஈகை செய்வது சமூகத்தின் இன்றியமையாயதாகும் என்ற கருத்துப் புலப்படுகிறது. சமகாலத்தில் உதவி என்பது குறி எதிர்பார்ப்பை உடைத்ததாகும். இதனை விவேகசிந்தாமணியில் "கதிர் விளைந்த செந்நெல் மழியில்லாமல் வாடுவதைக்கண்டும் மேகங்கள் தங்களிடம் உள்ள நீரை அலை பொங்கும் கடலில் கொட்டும், அதைப்போல் அதிகம் செல்வம் படைத்த செல்வர்கள் வாடும் ஏழைகளின் முகத்தைப் பாரத்து அவர்களுக்கு கொடுக்காமல் பணம் படைத்தவர்களுக்கே பணத்தைக் கொடுப்பார்கள்" என்ற கருத்தின் மூலம் சமூகத்தில் ஈகை மலிந்து வருவதைக் காணமுடிகிறது. வள்ளுவரும் அற இலக்கியங்களும் கட்டமைத்த ஈகை வறியவர்க்கு இல்லாது வலிமையானவர்க்கு கொடுப்பதாக மரபு மாற்றம் அடைந்துள்ளது. இக்கருத்தினை, சமயம், பொருளாதாரம் என்ற இரண்டு பின்புலங்களில் ஆராய வேண்டும். மனிதர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குவதற்குப் பிறர்க்கு உதவிசெய் என்ற தன்னுடையக் கருத்தியல் கொள்கையைச் சமயங்கள் மறுகட்டமைப்பு செய்துள்ளன. மனிதர்கள் இல்லாமை போல் நடித்து செல்வம் சேர்ப்பதைக்

கொள்கையாக் கொண்டு மனிதர்கள் வாழ்கின்றனர். இத்தகையக் காரணத்தால் ஈகை விமர்சிக்கப்படுவதைக் காணமுடிகிறது.

## *செல்வமும் உறவுகளும்*

சமூக உறவுகளை அங்கிகரிப்பது செல்வமாக உள்ளது என்ற கருத்து இந்நூலில் விரவியுள்ளன. செல்வம் இருக்கும் இடத்தில் உறவுகள் காரணகாரியமின்றி கூடுவதும் புகழ்வதும் சமூகத்தில் இயல்பானதக உள்ளன. பணம் இருந்தால் மனிதனின் இனம், குடி என்ற ஏற்ற தாழ்வு அகற்றப்பற்றுவிடும். இதனை,

"பொன்னொரு மணிஉண் டானால்
புலைஞனும் கிளைஞன் என்று
தன்னையும் புகழ்ந்து கொண்டு
சாதியில் மணமும் செய்வார்
மன்னராய் இருந்த பேர்கள்
வகைகெட்டுப் போவார் ஆகில்
பின்னையும் யாரோ என்று
பேசுவார் ஏசு வாரே" (விவேகசிந்தாமணியில், பாடல், 25)

என்ற பாடலில், பணம் இருந்தால் குலம் கோத்திரம் பாராமல் மணமுடித்துவைப்பர். இதைப்போல் மன்னராக வாழ்ந்தாலும் நிலைகெட்டு வறுமையுற்றாள் இழிவாகப் பேசும் உலகம். இக்கருத்தின் வழியாக உறவு என்பது பொருளாதாரப் பின்னனியி கட்டமைக்கப்படுவதைக் காணமுடிகிறது. சான்றாக விவேகசிந்தாமணி நூலில் உறவுகள் "மரத்தில் பூவும், காயும், பழங்களும் இருந்தால் பறவைகள் எல்லாம் தம் வீடாக எண்ணி வந்து தங்கும் அது போல் உறவுகள் செல்வம் இருந்தால் உறவுகள் வந்து தங்கும், செல்வம் இல்லையென்றால் உறவுகள் வந்து தங்காது" (*விவேகசிந்தாமணி*, பாடல், 6) என்று எடுத்துரைக்கப்படுகிறது. எனவே செல்வமும் உறவும் நெருங்கிய தொடர்புடையது என்ற கருத்தின் நீட்சியை இன்றுவரை காணமுடிகிறது.

## *வறுமை*

உலகத்தில் உள்ள அனைவரும் கண்டு அஞ்சுவது வறுமை ஒன்றாகும். வறுமை வந்துவிட்டால் "பெரியவர்கள் இருக்கும் சபைக்குச் செல்ல வெட்கமாக இருக்கும், வேங்கை போலிருந்த வீரம் குறைந்து போகும், விருந்தினரைக் கண்டால் வெட்கி ஓடச் சொல்லும், மனைவியிடமும் அஞ்சத்தோன்றும், அற்பர்கள் சொல்லுக்கு ஏற்றார் போல் நடக்க வேண்டிவரும், உலகே பழிக்கும் நிலை வரும்" (*விவேகசிந்தாமனி*, பாடல், 21) என்ற கருத்து நிகழ்காலத்துக்கும் ஏற்புடையதாகும். உலகில் நடக்கும் தீய செயல்கள், வறுமை, செல்வம் ஆகிய இரண்டு வழிகளில் உருவாகின்றன. வறுமையின் காரனமாக நடைபெறும் தீய செயல்கள் அடிபடைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தொடங்குகின்றன. மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டின்படி, அடிப்படைத் தேவைகள் நிறைவடைந்தவுடன் பாதுகாப்புத்தேவைத் தொடர்கிறது என்கிறார். (Y Saul McLeod, 2018, *Maslow's Hierarchy of Needs*). பாதுகாப்புத் தேவை தொடர்கிறபோது சமூகத்தில் செல்வம் சேமித்தலுக்கான தீசெயல்கள் தொடர்கின்றன. எனவே, வறுமை உலகத்தின் கொடிய நோயாக செவ்வியல் இலக்கியங்களில் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை எடுத்துரைக்கின்றன.

## *யாத்திரை செல்லும் வழிமுறை*

தமிழகத்தில் யாத்திரை செல்லும் முறை கிபி,16 ஆம் நூற்றாண்டில் பெரும் வழக்காக இருந்துள்ளது. விவேகசிந்தாமணி என்ற நூல் யாத்திரை செல்வதற்கு முன் பயன ஏற்பாடு குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளது. "யாத்திரை செல்பவர்கள் தங்களுடன் எடுத்து செல்லவேண்டியவற்றை பட்டியல் இடுகிறார். அவை, அரிசி, மிளகுத்தூள், புளி, உப்பு, வடகம், பாத்திரங்கள், நீர் எடுக்கும் கயிறு, ஊன்று கோல், ஆடை, நெருப்பு பற்ற வைக்க சக்கிமுக்கி கல், ராந்தல், கைவாள், முகம் பார்க்கும் கண்னடி, பூசைக்கு வேண்டிய பொருள்கள், பாக்கு, குடை, ஏவலாள், சிற்றுண்டி, கம்பிளி, ஊசி, நூல், எழுத்தாணி, சுண்ணாம்பு, ஊறுகாய், கரண்டி, நல்லெண்ணெய், பணம், பூட்டு, கத்தி இவையெல்லம் தேடி சேகரித்துக்கொண்டு தகுந்த வண்டிகளில் பயணம் செய்து, நீரும் நிழலும் உள்ள இடங்களில் தங்கி பெண்கள் உதவியோடு சமைத்துண்டு செல்வது யாத்திரைக்கு அழகாகும்" (விவேகசிந்தாமணி, பாடல், 135) என்று பட்டியல் விவரிக்கப்படுகிறது. பிரயானம் செய்யும் முறை

குறித்து விவரித்துப் பேசுகின்ற நுல், உணவு சமைக்க பெண்களை அழைத்துச் செல்வது, நெருப்பு தொடங்கி ஊறுகாய் வரை இந்நூலில் பட்டியல் இருப்பதன் மூலம் சமூக வாழ்வியல் முறையக் காணமுடிகிறது.

## *காதல் எடுத்துரைக்கும் முறை*

இந்நூலில் பத்துக்கு மேற்பட்டவை புதிர் போடும் பாடல்களாக உள்ளன. கிராமங்களில் திண்ணையில் அமர்ந்துகொண்டு புதிர் போட்டு விளையாடு வழக்கம் பழ நெடுங்காலமாக உள்ளன. காதலன், தான் சொல்ல விரும்பும் கருத்தை வெளிப்படையாக கூறாமல் புதிர் மூலம் கூறும் கருத்துடைய காதல் பாடல்கள் இநூலில் அமைந்துள்ளன. இவற்றில் ஒன்று,

"ஒருநான்கும் ஈரையும் ஒன்றே கேளாய்

உண்மையாய் ஐயரையும் அரையும் கேட்டேன்

இந்நான்கும் மூன்றுடனே ஒன்றும் சொல்லாய்

இம்மொழியைக் கேட்டபடி ஈந்தாய் ஆயின்

பெருநான்கும் அறுநான்கும் பெறுவாய் பெண்ணே

பின்னேஓர் மொழிபுகல வேண்டாம் இன்றே

சரிநான்கும் பத்தும்ஒரு பதினைந் தாலே

சகிக்க முடியா தினிஎன் சகியே மானே" (விவேகசிந்தாமணி, பாடல்,18)

என்று கணக்கு மூலம் காதல் செய்தி கூறும் பாடல் அமைந்துள்ளன. பாடலில், கன்னியே நான் சொல்வதைக் கேள். உண்மையாய் நான் உன் செவ்வாயைக் கேட்டேன். அதற்கு பதில் சொல். நான் கேடட்தை நீ கொடுத்தால் ஜெயம் பெறுவாய். பெண்ணே வேறு மொழி கூறவேண்டாம். என்மீது பிரியம் கொண்டவளே மன்மதனால் உண்டாகும் வேதனையை இனியும் பொறுக்க முடியாது. என்ற கருத்தினை, நாள், நட்சத்திரம், வருடம் இவைகள் பெயர் வைத்து புதிர் போடுகிறார் புலவர்.

ஒரு நான்கு ஈரரை ஒன்று (4+1/2+1/2+1=6) ஆறாவது ராசி கன்னி. கன்னி ஒ கேளாய். ஐந்து அரையும் 2,1/2, ஒரு அரையும் 1/2 சேர்ந்தால் மூன்று 3, மூன்றாவது கிழமை செவ்வாய், (கன்னியே செவ்வாய்கேட்டேன்). இரு நான்கு மூன்று ஒன்று இவைகளைக் கூட்டினால் பன்னிரண்டு(4+4+3+1=12). பன்னிரண்டாவது நட்சத்திரம் உத்திரம். உத்திரம் என்றால் உத்தரவு சொல் என்று பொருள் (கன்னியே உன் செவ்வாய் கேட்டேன் உத்தரவு சொல்). நான்கும் ஆறு நான்கும் சேர்ந்தால் இருபத்தியெட்டு (4+24=28). இருபத்தியெட்டாவது வருடத்தின் பெயர் ஜெய ஆகும். (கன்னியே உன் செவ்வாய் கேட்டேன் உத்தரவு சொல், ஜெயம் உண்டாகும்). நான்கும் பத்தும் பதினைந்தும் சேர்ந்தால் இருபதொன்பது (4+10+15= 29). 29தாவது வருடத்தின் பெயர் மன்மதன். மன்மதனால் வரும் வேதனையை இனியும் சகிக்க முடியாது (கன்னியே உன் செவ்வாய் கேட்டேன், உத்தரவு சொல், ஜெயம் உண்டாகும், இனியும் மன்மதனால் வரும் வேதனையை சகிக்க முடியாது). இது போன்ற புதிர் தன்மை கொண்ட பாடல்கள் பிற்கால புலவர்களால் அதிகம் பாடப்பட்டன.

## *முடிவுரை*

விவேகசிந்தாமணி நூலில் ஒழுக்கவியல் சிந்தனை விரவிக்காணப்படுகிறது. குழந்தைகள் பெற்றோரிடம் நடந்து கொள்ளும் முறை குறித்து விரிவான அறிவுரைக் கூறப்படுகிறது. உறவுகளும் செல்வமும் ஒரே நேர்கோட்டில் இயங்குகின்றன என்ற கருத்து எடுத்துரைக்கப் படுகிறது. வறுமை குறித்த புரிதல் சமகாலத்திற்கு ஏற்றார் போல் எடுத்துரைக்கபட்டுள்ளது. ஈகை குறித்த கருத்தியல் மூலம் செல்வம் இருப்பவர்கள் தற்போது பணம் இருப்பவர்கள் நோக்கி செயல்படுகிறார்கள் என்ற சமூக எரிச்சல் எடுத்துரைக்கப்படுகிறது. புதிர் பாடல்கள் மூலம் காதல் புதுமையான முறையில் எடுத்துரைக்கப்படுகிறது. சமூகத்தில் சொல்லக்கூடதவை, யாத்திரை செல்லும்முறை, துன்பம் வரும் வழி என்று சமூக ஒழுக்கவியல் கருத்துக்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்நூலில் கூறபட்டுள்ள வாழ்வியல் கருத்துக்கள் நிகழ்காலத்தில் வாழவேண்டிய மனிதர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அற இலக்கியங்கள் சமூக ஒழுக்கத்தை உற்பத்தி

செய்கின்றன. விவேகசிந்தாமணி வாழ்வியல் ஒழுக்க நூல். இந்நூல் கூறும் கருத்துக்களை தெரிந்து கொள்வதன் மூலம் வாழ்வியல் நெறிகளில் ஏற்படும் இடர்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும். எனவே, இந்நூலில் கூறப்பட்ட ஒழுக்கவியல் கருத்துக்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன என்பதை இவ்வாயவு நிறுவுகிறது.

## RFERENCE


[1] Kanesaraja., k., (2018 Jun), ***Kizaiththeya sinthanai marabil asaragovai ozukkaviyal nokku,*** Journal Of Social Review, Vloume 5 (1).

[2] Saravanajothi, (2020), ***Construction of Ethics in Cirupancamulam,*** International Journal of Research and Analytical Reviews (IJRAR), Volume 7, Issues 2., www.ijrar.org.

[3] Saravanajothi, (2020), ***The sociopolitical background of manimegalai*****, International Journal of Creative Research Thoughts (IJCRT)** Volume 8, Issues 6, **www.ijcrt.org**

[4] Saravanajothi, (2020), ***varumunnar kaavathaan valkai (Thiruvalluvarin olukkaviyal vilippunarvu)***, Pathivukal.com, https://www.geotamil.com/.

[6] Saravanajothi, (2020), **Construction of Ethics in Cirupancamulam,** International Journal of Research and Analytical Reviews(IJRAR), Volume 7, Issues 2., www.ijrar.org

[7] Sakthi., kavinjar., (2016), ***Vivegasinthamani,*** Chennai: Pirema pirasuram.

[8] Saul McLeod, Y., (2018), ***Maslow's Hierarchy of Needs***, https://www.simplypsychology.org/simplypsychology.org-Maslows-Hierarchy-of-Needs.pdf

[9] Varatharasanaar., Muva., ***Thirukural,*** http://www.tamilvu.org/library/l2100/html/l2102vur.htm